**உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், பத்மநாபபுரம்**

**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்**

**2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.165/2021**

**CNR- TNKK07-000424-2021**

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>குலசேகரம் காவல் நிலையம்.<br>குற்ற எண்.108/2021 |
| எதிரியின் பெயர் | : | சுரேஷ் (வயது 37)<br>த/பெ. கணபதி<br>தடிக்காரன்கோணம்<br>சுருளகோடு அஞ்சல். |
| அரசு தரப்பில் எதிரியின் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டு | : | அரசுத்தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 326, 307 ன் படி குற்றம் முறையிடப்பட்டுள்ளது. |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 326, 324, 307 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது |
| தீர்ப்புரை | : | 1) எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(பி), ன் படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன்கீழ் விடுதலை செய்தும்,<br><br>2) எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவு 307 ன் படி குற்றவாளி என |

தீர்மானித்து 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் ரூ.5,000/– அபராதம் விதித்தும், அபராதத் தொகையை செலுத்த தவறினால் மேலும் 3 மாதம் கடுங்காவல் சிறைத்தண்டனையும் விதித்து கு.வி.மு.ச.பிரிவு 235(2)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

3) இவ்வழக்கில் ஆர்.பி. எண் 16/2021–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.2 TN 74 W 1087 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் நீதிமன்றத்தில் இருந்து இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி சான்று பொருளை மேல்முறையீட்டின் தீர்ப்பிற்கு உட்பட்டு உரிமையாளரே வைத்துக்கொள்ளலாம் என்றும் பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட வெட்டுக்கத்தி ஒன்று உபயோகமற்றது என்பதால் அவற்றை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பு தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி சார்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D.காஸ்ட்டன் கிளிட்டஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த வழக்கு எனது பரிசீலனையின் கீழ் இருந்து வந்தபின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**தீர்ப்புரை**

சாட்சி 1 மங்கலத்துறையில் குடும்பத்துடன் குடியிருந்து வீட்டு வேலைகளை கவனித்து வருவதாகவும் சாட்சி 1ன் கணவரான சாட்சி 2 செந்தில் பால் வெட்டும் தொழில் செய்து வருவதாகவும் சுருளோட்டில் வசிக்கும் சஜு (எ) ஸ்டாலின் என்பவர் சாட்சி 2ன் நண்பர் என்றும், சம்பவத்திற்கு பதிமூன்று நாட்களுக்கு முன்பு சஜு (எ) ஸ்டாலின் எதிரியின் மனைவி ஜெயஸ்ரீ என்பவரை அழைத்து கொண்டு எங்கோ சென்றுள்ளதாகவும் அதற்கு சாட்சி 2 உடந்தை என நினைத்து சாட்சி 2ன் செல்போனில் அடிக்கடி தொடர்பு கொண்டு அடிக்கடி கெட்ட வார்த்தைகள் பேசி மிரட்டி வந்ததாகவும் இதனால் எதிரிக்கு சாட்சி 2ன் மீது முன்விரோதம் இருந்து வந்ததாகவும் இதனால் எதிரி சாட்சி 2 ஐ கொலை செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருந்ததாகவும் இந்நிலையில் 19.04.2021ம் தேதி 22.00 மணிக்கு சாட்சி 2ம் அவரின் நண்பரான சாட்சி 3ம் சேர்ந்து கர்நாடகா மாநிலத்திற்கு ரப்பர் பால் வெட்டுவதற்கு ஆட்களை கூப்பிடுவதற்கு சாட்சி 2ன் இரு சக்கர வாகனத்தில் சென்று ஆட்களை கூப்பிட்டு விட்டு திரும்ப பொன்மனை ஜங்சன் வந்து அங்குபேசிக்கொண்டு நிற்கும் போது எதிரி TN 74 W 1087 என்ற எண் கொண்ட மோட்டார் சைக்கிளில் வந்து சாட்சி 2 ஐ பார்த்து எனது மனைவியை சஜுவுடன் அனுப்பி வைப்பாயா தேவிடியா பயலே புண்டாமோனே என கெட்டவார்த்தைகள் பேசி கொண்டு தனது கையில் வைத்திருந்த வெட்டுக்கத்தியால் இத்தோடு செத்து தொலைந்து போ என கூறி கொண்டு சாட்சி 2ன் இடது பக்க தலையின் பின்புறம் மூன்று

இடங்களில் வெட்டி சிறுகாயங்கள் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சித்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 326, 307 ன் படி குலசேகரம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதலில் பரிசீலனை செய்த பத்மனாபபுரம் நீதித்துறை நடுவர், மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதல் விசாரணை பதிவேட்டு வழக்கு எண். 18/2021 என கோப்பிற்கு எடுத்து, இவ்வழக்கின் எதிரிக்கு இவ்வழக்கின் ஆவணங்களில் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 208–ன் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வுநீதிமன்றம், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவிலுக்கு கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில், நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண் 165/2021 என கோப்புக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. இந்நீதிமன்றத்தில் எதிரி ஆஜரான போது இருதரப்புகளை கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றங்களை புரிந்திருக்க கூடும் என்று அனுமானிக்க முதல் நிலையில் ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 326, 307 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அதை விளக்கி கூறி வினவிய போது எதிரிகுற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 14 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் 1 மற்றும் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்து பார்த்த போது, சான்றாவணங்களும், சான்று பொருட்களும் வரிசை மாறி குறியீடு செய்யப்பட்டிருந்தது. வரிசை எண்ணில் மட்டும் மாறுதல் இருந்ததால் சான்றாவணங்களின் வரிசை எண்ணும், சான்று பொருட்களின் வரிசை எண்ணும் முறைப்படி மாற்றம் செய்யப்பட்டது. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்களின் வரிசை எண்ணில் ஏற்பட்ட தவறு சரிசெய்யப்பட்டதால் எதிரிக்கு எவ்வித நீதி வழுகலும் ஏற்படாது. மேலும் எதிரிக்கு இதனால் எவ்வித ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதால் எதிரி தரப்பிற்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. )

6. <u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**</u>

அ.சா.1 மஞ்சு தனது சாட்சியத்தில் சாட்சி செந்தில் தனது கணவர் என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், எதிரியின் மனைவியை சஜீவ் என்பவர் அழைத்து சென்று விட்டதாகவும் அது பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், அதற்கு தனது கணவர் செந்தில் தான் காரணம் என பல முறை எதிரி தனது கணவரை மிரட்டி வந்ததாகவும் 19.04.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு பால்வெட்டுவதற்கு ஆட்களை கூப்பிட சென்று விட்டு வரும் போது பொன்மனை சந்திப்பில் வைத்து தனது கணவரை எதிரி வெட்டுக்கத்தியால் இடதுபக்க தலையில் வெட்டியதாகவும், அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் எதிரி தப்பி சென்று விட்டதாகவும் அங்கிருந்த நபர்கள் தனது கணவரை மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்துள்ளதாகவும் குலசேகரத்திலிருந்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு தனது கணவரை அனுப்பி வைத்ததாகவும் மணியன் என்பவர் இரவு 10.30 மணிக்கு மேற்படி தகவலை தன்னிடம் சொன்னதாகவும், தான் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு போனதாகவும் குலசகேரம் காவல்நிலையத்தில் புகார் மனு அ.சா.ஆ.1 கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.2 செந்தில் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், அ.சா.1 தனது மனைவி என்றும், எதிரியின் மனைவியை தங்கள் ஊரை சேர்ந்த சஜீவ் என்பவர் எங்கோ அழைத்து சென்று விட்டதாகவும் அதற்கு தான் காரணம் என்று தன்னை அடிக்கடி மிரட்டி வந்ததாகவும், இந்நிலையில் 19.04.2021ம் தேதி இரவு 10.00 மணியளவில் பொன்மனை சந்திப்பில் வைத்து தான் பால்வெட்டும் வேலைக்கு ஆள் பார்த்து விட்டு வரும் போது மணி என்பவருடன் பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது எதிரி இருசக்கர வாகனத்தில் வந்து தன்னை பார்த்து பிண்டாமோனே, தேவிடியா பயலே என்று கெட்டவார்த்தைகள் பேசி வெட்டுக்கத்தியால் தனது தலையின் இடது பக்கத்திலும், உச்சந்தலையிலும், இடது பின்னந்தலையின் கீழ் பகுதியிலும் வெட்டியதாகவும் வெட்டு பட்ட உடன் தனக்கு நினைவு இல்லாமல் விழுந்து விட்டதாகவும் மணி மற்றும் ராஜு ஆகியவர்கள் குலசேகரம் மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்ததாகவும் நடவடிக்கை எடுப்பதற்காக தன் மனைவி புகார் கொடுத்ததாகவும் தன்னிடம் காட்டப்படும் வெட்டுக்கத்தியால் தான் எதிரி தன்னை வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.3 ராஜேந்திரபிரசாத் தனது சாட்சியத்தில், அ.சா.1ஐ தெரியும் என்றும், ஆஜர் எதிரியையும் தெரியும் என்றும், 19.04.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடயை அடைத்து விட்டு வெளியே வரும் போது ஐயோ என்று சத்தம் கேட்டதாகவும், தான் ஓடி வந்து பார்க்கும் போது அ.சா.2 ரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் எதிரி வெட்டுக்கத்தியால் மூன்று முறை அ.சா.2ஐ வெட்டியதாகவும் தான் பயந்து போய் ஓடி சென்று வேறு ஆட்களை கூட்டி வந்து ஆம்புலன்ஸ் மூலம் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அ.சா.2ன் நண்பர் வேறு ஒருவரின் மனைவியை கடத்தி சென்றது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையில் எதிரி அ.சா.2ஐ வெட்டி விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.4 செல்வன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் தான் பொன்மனை சந்திப்பில் ஆட்டோ ஓட்டி வருவதாகவும், சுமார் காலை 09.00 மணிக்கு போலீசார் தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள், போட்டுக்கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.5 மணியன் தனது சாட்சியத்தில் தனக்கு அ.சா.1ஐ தெரியும் என்றும், அ.சா.2யும் தெரியும் என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், 2021ம் வருடம் 19ம் தேதி இரவு 10.00 மணிக்கு பொன்மனை சந்திப்பில் வைத்து சுரேஷ் – செந்திலை வெட்டுக்கத்தியால் தலையில் 3 இடங்களில் வெட்டியதாகவும் கீழே விழுந்த செந்திலை தான் தூக்கியதாகவும் குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.6 ராமையன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம்

தன்னுடையது தான் என்றும், மேற்படி கையொப்பங்களை காவல்நிலையத்தில் வைத்து போட்டதாகவும், தான் புகார் கொடுப்பதற்காக குலசேகரம் காவல்நிலையத்திற்கு 28.07.2021ம் தேதி மாலை 06.00 மணிக்கு குலசேகரம் காவல்நிலையம் சென்றிருந்ததாகவும், எதிரியின் வீட்டிலிருந்து வெட்டருவாள் மற்றும் இருசக்கர வாகனத்தை கைப்பற்றி வந்ததற்காக கையெழுத்து போட சொன்னதாகவும் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும் அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.7 டாக்டர். ராம்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 20.04.2021ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு தான் பணியில் இருந்த போது செந்தில் (41) என்பவர் சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டதாகவும் அவரை தான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்ததாகவும் அவர் சுயநினைவுடன் இல்லை என்றும், தலையில் சிதைந்த காயங்கள் இரண்டு இருந்தது அந்த காயங்களில் எலும்பு முறிவும் இருந்ததாகவும், மூளையின் சிறிய பகுதி வெளியே காணப்பட்டதாகவும் அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்ததாகவும் சி.டி ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மூளையில் சிறிய ரத்தக்கட்டு இருந்ததாகவும் மூளையில் பெரிய அளவில் அழுத்தம் இல்லாததால் ஊசி மற்றும் மருந்தின் மூலம் சிகிச்சை அளித்ததாகவும் தலையின் இடது பக்க பரைட்டல் எலும்பு பகுதியில் முறிவு காணப்பட்டதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதாகவும் அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 என்றும், காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் வெட்டுக்கத்தி போன்ற கூர்மையான ஆயுதத்தால் தாக்கும் போது ஏற்பட வாய்ப்புள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.8 ஷஜின் தனது சாட்சியத்தில், 19.04.2021ம் தேதி இரவு பணியாக பொன்மனை மற்றும் சுருளோடு பகுதிகளுக்கு கம்பியாளராக நியமனம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.9 பிரைட்சிங் பிரான்சிஸ் தனது சாட்சியத்தில் 19.04.2021ம் தேதியன்று இரவு 10.00 மணியளவில் குலசேகரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது தங்கச்சன் மகன் செந்தில் என்பவர் (41) 108ல் ஆம்புலன்சில் வந்ததாகவும் அவர் சுயநினைவுடன் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளதாகவும் அப்போது அவர் 19.04.2021 அன்று இரவு 09.45 மணியளவில் பொன்மனை சந்திப்பில் வைத்து அடையாளம் தெரிந்த ஒரு நபர் வெட்டுக்கத்தி கொண்டு தாக்கியதாகவும் அதனால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற வந்ததாக கூறியதாகவும் அவரை பரிசோதிக்கும் போது அவருக்கு பின்பக்க தலையில் இடது புறத்தில் சிதைவு காயம் 5 x 3 cm x எலும்பு தெரிந்ததாகவும் சிதைந்த காயம் காணப்பட்டது ரத்தம் வடிந்து காணப்பட்டதாகவும் இடது புற பக்கவாட்டு தலையில் (பரைட்டல்) 8x 2 x எலும்பு தெரிந்த அளவு ஆழமுள்ள சிதைவு காயம் காணப்பட்டதாகவும் ரத்தம் வடிந்து காணப்பட்டதாகவும் அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும் அங்கு அவர் 20.04.2021ம் தேதி விடியற்காலை 12.25 மணிக்கு உள்நோயாளியாக அனுமதித்து 03.05.2021ம் தேதி மதியம் வீட்டிற்கு திரும்பியுள்ளதாகவும் தான் வழங்கிய சான்று அ.சா.ஆ.4 என்றும், அந்த காயச்சான்றில் முதல் காயம் சாதாரண காயம் என்றும், 2வது காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. அ.சா.10 மணி தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், எதிரியின் ஊர் வீரபுலி என்றும், 2021ம் ஆண்டு தான் குலசேகரம் காவல்நிலையத்திற்கு சென்றிருந்ததாகவும் எதிரியின் வழக்கு காவல்நிலையத்திற்கு வந்ததாகவும் காவல்நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் எதிரியை விசாரித்ததாகவும் சார்பு ஆய்வாளர் எதிரியை

அடிக்கவில்லை என்றும், எதிரி செந்திலை வெட்டியதாக தெரிய வந்ததாகவும், என்ன முன்விரோதம் என்று தெரியாது என்றும், செந்திலை மருத்துவமனைக்கு சென்று பார்க்க போனதாகவும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தானும், ராமையனும் கையொப்பம் போட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.11 பாக்கியராஜ் தனது சாட்சியத்தில் தான் 19.04.2021ம் தேதி நான் இரவு பணியில் இருந்ததாகவும் அப்போது மின்சாரம் இருந்ததா என்று போலீசார் விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.12 குமரேசன் தனது சாட்சியத்தில், இதற்கு முன்னர் 20.04.2021ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது செந்தில் மனைவி மஞ்சு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண்.108/2021 பிரிவுகள் 294(பி), 307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 பதிவு செய்ததாகவும் அசலை நீதிமன்றத்திற்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. அ.சா.13 பாஸ்கரன் தனது சாட்சியத்தில், இதற்கு முன்பு குலசேகரம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றிய போது 20.04.2021ம் தேதி குலசேகரம் காவல்நிலைய குற்ற எண். 108/2021 பிரிவுகள் 294(பி), 307, இ.த.ச வழக்கை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதிகாலை 01.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வன், முருகன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 தயார் செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் மஞ்சு, மணியன், ராஜேந்திர பிரசாத், ராஜு, ராஜேஷ், சந்தோஷ், முருகன், செல்வன்,

ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 23.04.2021ம் தேதி சாட்சிகள் செந்தில், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமரேசன் ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 14.06.2021ம் தேதி தான் பணிமாறுதல் ஆகி சென்று விட்டப்படியால் வழக்கு கோப்பை தனக்கு பின்னால் வந்த காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

19. அ.சா.14 உமா தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் குலசேகரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது குலசேகரம் காவல்நிலைய குற்ற எண்.108/2021 பிரிவுகள் 294(பி), 324, 326, 307 இ.த.ச படியான வழக்கை 24.06.2021ம் தேதி தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டதாகவும் சம்பவ இடம் ஏற்கனவே காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் போலவே இருந்ததால் தான் தனியாக பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், சாட்சிகள் மஞ்சு, செந்தில், மணியன், ராஜேந்திர பிரசாத், ராஜு, ராஜேஷ், சந்தோஷ் ஆகியவர்களை விசாரித்ததாகவும் அவர்களும் ஏற்கனவே காவல் ஆய்வாளரிடம் கூறியது போலவே தன்னிடமும் கூறியதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரி சுரேஷ் 17.06.2021ம் தேதி முன் ஜாமீன் பெற்று பிணையில் இருந்தவரை 28.07.2021ம் தேதி 18.00 மணிக்கு குலசேகரம் காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் ராமையன், மணி, ஆகியவர்கள் முன்னிலையில் விசாரித்த போது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் TN.74 W 1087 பஜாஜ் பாக்சர் இருசக்கர வாகனம் மற்றும் சம்பவத்திற்கு பயன்படுத்திய வெட்டுக்கத்தியை எதிரியின்

தம்பி வீட்டின் பின்புறத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 என்றும், அத்தாட்சி அ.சா.ஆ.9 என்றும், படிவம் 95 அ.சா.அ.10 என்றும், மேற்படி வழக்கு சொத்துக்களை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் இருசக்கர வாகனம் சா.பொ.2 என்றும், 02.08.2021ம் தேதி சாட்சிகள் சஜின், பாக்கியராஜ், ராஜேந்திர பிரசாத் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 03.08.2021ம் தேதி சாட்சி 2க்கு சிகிச்சை வழங்கிய குலசேகரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. பிரைட்சிங் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றதாகவும் பின்னர் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவர் திரு. ராம்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றதாகவும் காயம்பட்ட நபருக்கு இருந்த காயம் கொடுங்காயம் என்பதால் வழக்கு சட்ட பிரிவை மாற்றம் செய்து அறிக்கை சமர்பித்ததாகவும், அந்த அறிக்கை அ.சா.ஆ.11 என்றும், எனவே தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

20. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)–ன் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

21. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தில் எதிரி மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

22. ***பிரச்சனைக்கான தீர்வு*** ?.

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, இவ்வழக்கின் எதிரியும் காயம்பட்ட அ.சா.2 மற்றும் சுருளோட்டில் வசிக்கும் சஜு (எ) ஸ்டாலின் ஆகியோர்கள் நண்பர்கள் என்றும், சம்பவத்திற்கு 13 நாட்களுக்கு முன்னர் இவ்வழக்கின் எதிரியின் மனைவி ஜெயஸ்ரீ என்பவரை சஜு (எ) ஸ்டாலின் அழைத்துக்கொண்டு எங்கோ சென்றுவிட்டார் என்றும், அதற்கு இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 உடந்தையாக இருந்ததாக நினைத்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரி அவரிடம் முன்விரோதம் கொண்டு பிரச்சினை செய்து வந்த நிலையில், 19.04.2021ம் தேதி இரவு 10 மணிக்கு காயம்பட்ட அ.சா.2ம் அவரது நண்பரான அ.சா.5ம் ரப்பர் பால் வெட்டுவதற்கு ஆட்களை அழைத்து வருவதற்காக பொன்மனை சந்திப்பில் நின்று கொண்டிருந்த போது எதிரி TN 74 W 1087 என்ற எண் கொண்ட மோட்டார் சைக்கிளில் வந்து அ.சா.2 ஐ அசிங்கமாக பேசி வெட்டுக்கத்தியால் தலையில் வெட்டி கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்தார் என்ற அரசுத்தரப்பு வழக்கானது அ.சா.2, அ.சா.5 ஆகிய சாட்சிகளின் மூலமும், காயம்பட்ட அ.சா.2க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவரான அ.சா.7 மற்றும் அ.சா.9 ஆகியோரின் சாட்சியத்திலிருந்தும் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ–4 காயச்சான்றுகளிலிருந்தும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளதாகவும், காயம்பட்ட சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி தன்னை வெட்டுக்கத்தியால் தலையில் வெட்டி கொடுங்காயங்கள் ஏற்படுத்தினார் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் வெட்டுக்கத்தியால் தலையில் வெட்டி கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்த விவரம் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ள படியால் எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

23. மாறாக எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது எழுத்துப்பூர்வ வாதுரையிலும், வாய்மொழி வாதத்திலும் 20.04.2021ம் தேதி 1 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து அ.சா.ஆ.1 புகார் மனு கொடுக்கப்பட்டதாக உள்ள நிலையில், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் 19.04.2021ம் தேதி ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் எழுதி கொடுத்ததில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், சம்பவ இடம் சாலையின் கிழக்கு பக்கம் என்று அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர் முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்துள்ளதாகவும் அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகியோர் எதிரி மூன்று முறை வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.ஆ–2 மற்றும் அ.சா.ஆ–3 காயச்சான்றிலிருந்தும் மருத்துவரின் சாட்சியத்திலிருந்தும் காயம்பட்ட அ.சா.2க்கு தலையில் 2 காயங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வெட்டுக்கத்தியால் வெட்டும் போது வெட்டுக்காயம் ஏற்படும் என மருத்துவர்கள் கூறியுள்ள நிலையில், காயச்சான்றின் படி அ.சா.2க்கு சிதைந்த காயம் ஏற்பட்டுள்ளது என்றும், இரு சக்கர வாகனத்தில் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிக்கும் அ.சா.2க்கும் உள்ள முன் விரோதத்தால் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

24. அரசுத்தரப்பு வழக்கின் படி சுருளோட்டில் வசிக்கும் சஜு (எ) ஸ்டாலின் எதிரியின் மனைவியை எங்கோ அழைத்து சென்றுவிட்டபடியால் அதற்கு இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.2 உடந்தையாக இருந்ததாக எண்ணிக்கொண்டு அதனால் ஏற்பட்ட முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 19.4.2021ம் தேதி இரவு 10 மணிக்கு பொன்மனை சந்திப்பில் வைத்து எதிரி அ.சா.2ஐ வெட்டுக்கத்தியால் தலையில் 3 முறை வெட்டி கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்ததாக

எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது, பின்வருமாறு கேள்வி கேட்கப்பட்டுள்ளது.

*எதிரியின் மனைவியை ஸ்டாலின் அழைத்து சென்றதிலிருந்து எனக்கும் எதிரிக்கும் மனக்கசப்பு இருந்து வந்தது என்றால் சரிதான். "*

எனவே அரசுத்தரப்பால் குறிப்பிடப்பட்டுள்ள முன்விரோதம் எதிரியால் இவ்வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எதிரியின் மனைவியை அ.சா.2ன் நண்பர் ஸ்டாலின் என்பவர் எங்கோ அழைத்து சென்று விட்டார் என்பதால் அதற்கு அ.சா.2 காரணம் என எதிரி அ.சா.2ன் மீது முன்விரோதம் கொண்டிருந்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

25. இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், எதிரியின் மனைவியை தன் ஊரை சேர்ந்த சஜீவ் என்பவர் எங்கோ அழைத்து சென்றுவிட்டதாகவும் அதற்கு தான், தான் காரணம் என்று எண்ணி எதிரி அ.சா.2 ஐ அடிக்கடி மிரட்டி வந்ததாகவும், இந்நிலையில் 19.4.2021ம் தேதி இரவு 10 மணியளவில் பொன்மனை சந்திப்பில் வைத்து அ.சா.5 மணியன் என்பவரிடம் பேசிக்கொண்டிருந்த போது, எதிரி அங்கு வந்து தன்னை பார்த்து அசிங்கமாக பேசி வெட்டுக்கத்தியால் தனது தலையில் வெட்டி இடது பக்கத்திலும் உச்சந்தலையிலும் இடது பின்னந்தலையின் கீழ் பகுதியிலும் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 உடன் சம்பவ இடத்தில் இருந்த அ.சா.5 மணியன் தனது சாட்சியத்தில், 2021 வருடம் 19ம் தேதி இரவு 10 மணிக்கு பொன்மனை சந்திப்பில் வைத்து எதிரி அ.சா.2 ஐ வெட்டுக்கத்தியால்

தலையில் 3 இடங்களில் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார். காயம்பட்ட அ.சா.2ம் அவருடன் இருந்த அ.சா.5ம் எதிரி அ.சா.2 ஐ வெட்டி காயப்படுத்தியது குறித்து சாட்சியம் அளித்துள்ள நிலையில், காயம்பட்ட அ.சா.2க்கு முதலில் அ.சா.9 மருத்துவர் குலசேகரம் அரசு மருத்துவமனையில் 19.4.2021ம் தேதி இரவு 10 மணிக்கு சிகிச்சை வழங்கியதாகவும் காயம்பட்ட அ.சா.2க்கு கீழ்கண்ட காயங்கள் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

*1. பின்பக்க தலையின் இடது புறத்தில் சிதைவு காயம் 5X3 cmX எலும்பு தெரிந்தது அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது ரத்தம் வடிந்து காணப்பட்டது.*

*2. இடது புற பக்கவாட்டு தலையில் ( பரைட்டல்) 8X2X எலும்பு தெரிந்த அளவு ஆழமுள்ள சிதைவு காயம் காணப்பட்டது. ரத்தம் வடிந்து காணப்பட்டது.*

அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கி ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும் முதல் காயம் சாதாரண காயம் என்றும், 2வது காயம் கொடுங்காயம் என்றும் அ.சா.ஆ–3 காயச்சான்றிதழ் வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

26. 20.4.2021ம் தேதி அதிகாலை 1 மணியளவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அ.சா.2க்கு மேல்சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு. ராம்குமார் தனது சாட்சியத்தில், அ.சா.2ன் தலையில் சிதைந்த காயம் 2 இருந்ததாகவும், அந்த காயங்களில் எலும்பு முறிவு இருந்ததாகவும் மூளையின் சிறிய பகுதி வெளியே காணப்பட்டது

என்றும் சி,டி. ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மூளையில் சிறிய ரத்தக்காட்டு இருந்ததாகவும் அந்த ரத்தக்கட்டை ஊசி மற்றும் மருந்தின் மூலம் சிகிச்சை அளித்ததாகவும் தலையில் இடது பக்க பரைட்டல் எலும்பு பகுதியில் முறிவு காணப்பட்டதாகவும் அ.சா.ஆ–4 காயச்சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ.4 காயச்சான்றின்படி காயம்பட்ட அ.சா.2க்கு ஏற்பட்ட 2வது காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.2, அ.சா.5 ஆகியோரின் சாட்சியத்திலிருந்தும், அ.சா.7 மற்றும் அ.சா.9 மருத்துவரின் சாட்சியத்திலிருந்தும் காயம்பட்ட அ.சா.2க்கு ஏற்பட்ட 2வது காயம் கொடுங்காயம் என்பதும் அந்த காயம் எதிரியால் வெட்டுக்கத்தியால் வெட்டியதில் ஏற்பட்டது என்பதும் அரசுத்தரப்பால் இந்நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

27. இந்நிலையில் எதிரி தரப்பு பிரதான எதிர்வாதம் யாதெனில் அ.சா.ஆ.1 புகார்மனு அ.சா.1 குறிப்பிட்டுள்ளது போல் 20.04.2021ம் தேதி அதிகாலை 1 மணிக்கு குலசேகரம் காவல்நிலையத்தில் வைத்து கொடுக்கப்படவில்லை என்றும், அ.சா.1ன் சாட்சியப்படி 19.04.2021ம் தேதி இரவு 11.00 மணிக்கு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து போலிசாரால் எழுதி வாங்கப்பட்டது என்றும், எனவே அ.சா.ஆ.1 புகார் மனு கொடுக்கப்பட்ட விவரம் அரசுத்தரப்பால் எடுத்துக்காட்டப்படவில்லை என்றும் எனவே அ.சா.ஆ–1 புகார்மனு சந்தேகத்திற்கிடமாக உள்ளதாக வாதிடப்பட்டது.

28. இதுகுறித்து பார்க்கும்போது, அ.சா.ஆ–1 புகார்மனு 20.04.2021ம் தேதி அதிகாலை 1 மணிக்கு குலசேகரம் காவல்நிலையத்தில் பெறப்பட்டு அதன் அடிப்படையில் குலசேகரம் காவல்நிலைய சிறப்பு சார்பாய்வாளர் அ.சா.12, அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக உள்ளது. ஆனால் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் 19.04.2021ம் தேதி இரவு 11

மணியளவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து குலசேகரம் போலிசார் எழுதி வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ–1 புகார் மனு கொடுக்கப்பட்ட இடம் முரண்பட்ட வகையில் உள்ளது என்பது உண்மை தான். ஆனால் அ.சா.ஆ–1 புகார் மனு காலதாமதமாக கொடுக்கப்பட்டதாகவோ அந்த காலதாமதத்திற்குள் எதிரியின் பெயரை பொய்யாக சேர்த்ததாகவோ எதிர் வழக்கு எதுவும் புரியப்படவில்லை. காயம்பட்ட சாட்சியான அ.சா.2 மற்றும் வழக்கு சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சியான அ.சா.5 ஆகியோரின் சாட்சியம் தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமின்றியும் உள்ள நிலையில் அ.சா.ஆ–1 புகார் மனு காவல்நிலையத்தில் வைத்து கொடுக்கப்பட்டதா அல்லது மருத்துவமனையில் வைத்து கொடுக்கப்பட்டதா என்ற முரண்பாடு மட்டுமே அரசுத்தரப்பு வழக்கு முழுவதையும் பாதிப்பதாக இல்லை.

29. மேலும் எதிரி தரப்பு எதிர்வாதம் யாதெனில், இவ்வழக்கில் கண்ணால் கண்ட சாட்சியான அ.சா.3 ராஜேந்திரபிரசாத் என்பவர் காயம்பட்ட அ.சா.2ன் மாமனார் என்றும், அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலித்து பார்த்தாலே அவர் சம்பவத்தை பார்க்கவில்லை என்பது தெரியவரும் என்று வாதிடப்பட்டது. இது குறித்து பார்க்கும் போது, அ.சா.3 அ.சா.2ன் மாமனார் என்பது உண்மை தான். மேலும் அவர் தனது முதல் விசாரணையிலும் குறுக்கு விசாரணையிலும் அளித்துள்ள சாட்சியத்தை பரிசீலித்து பார்த்த போது முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்துள்ளார் என்பது உண்மை தான். உண்மையில் அ.சா.3 சம்பவ இடத்தில் இருந்திருந்தால் காயம்பட்ட அ.சா.2 உடன் குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு சென்றிருப்பார். அல்லது அவரது மகளான அ.சா.1க்கு உடனடியாக அ.சா.3 தகவல் கூறியிருப்பார். ஆனால் இவ்வழக்கில் அ.சா.3 அவ்விதம் செயல்படவில்லை. எனவே அவரது சாட்சியம் சந்தேகத்திற்கிடமாக உள்ளது என்பது உண்மைதான்.

30. சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சியான அ.சா.3 மற்றும் அ.சா. 5 ஆகியோரின் சாட்சியங்களுக்கிடையே முரண்பாடு உள்ளதாக வாதிடப்பட்டது. இது குறித்து பார்க்கும் போது, அ.சா.5 சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சியாக இருக்க வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அ.சா.5 சாட்சியத்தை பரிசீலித்து பார்த்த போது சம்பவ நாளான 19.04.2021ம் தேதி இரவு 10 மணிக்கு காயம்பட்ட அ.சா.2 உடன் அ.சா.5 சம்பவ இடமான பொன்மனை சந்திப்பில் வைத்து பேசிக்கொண்டிருந்துள்ளார். இதனை அ.சா.2 ன் சாட்சியம் உறுதியூட்டும் விதமாக உள்ளது. மேலும் அ.சா.2ன் சாட்சியத்தை அ.சா.5ன் சாட்சியம் உறுதியூட்டும் வகையில் உள்ளது. அ.சா.5ன் சாட்சியத்தை பரிசீலித்து பார்த்த போது, அதனை நிராகரிக்க எவ்வித நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களும் இல்லை. அ.சா.5ன் சாட்சியம் தெளிவாகவும் நம்பகத்தன்மையுடனும் உள்ளது.

31. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, சாட்சிகள் சம்பவ இடம் குறித்தும், அ.சா.2க்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தும் முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்திருப்பதாக வாதிட்டார். இது குறித்து பார்க்கும் போது, சம்பவ இடம் குலசேகரத்திலிருந்து சுருளோடு செல்லும் சாலையில் கிழக்கு பக்கம் நடந்தது என்று அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர் சாட்சியமளித்துள்ளார்கள் என்பது உண்மை தான். ஆனால் சம்பவ இடம் குலசேகரம் – சுருளோடு சாலையின் மேற்குபக்கமும் வலியாற்று முகத்திலிருந்து வரும் சாலை பொன்மனை சந்திப்பில் சேரக்கூடிய இடத்தில் வலது பக்கமாக நடைபெற்றுள்ளது என்பது அ.சா.ஆ.6 மாதிரி வரைபடத்திலிருந்து தெளிவாகத் தெரிய வருகிறது. மேலும் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ. 3 காயச்சான்றுகளிலிருந்தும் அ.சா.7 மற்றும் அ.சா.9 மருத்துவர்களின் சாட்சியத்திலிருந்தும் காயம்பட்ட சாட்சியான அ.சா.2க்கு

தலையில் 2 சிதைந்த காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோரும் அ.சா.1ம் தங்களது சாட்சியத்தில், எதிரி அ.சா.2 ஐ 3 முறை தலையில் வெட்டி காயப்படுத்தியதாக சாட்சியமளித்துள்ளார்கள் என்பதும் உண்மை தான். சம்பவ இட மாறுபாடு மற்றும் காயங்களின் எண்ணிக்கையில் உள்ள வேறுபாடு ஆகியவை அரசுத்தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கிடமாக மாற்றும் வகையில் உள்ளதா என்பது குறித்து பார்க்கும் போது, சாட்சிகளின் சாட்சியத்தின் சில பகுதிகள் பிற சாட்சிகளின் சாட்சியத்திற்கு முரணாகவும் சில குறைபாடுகள் கொண்டதாகவும் இருப்பதால் மட்டுமே அவர்களது சாட்சியம் முழுவதும் நிராகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து பார்க்கும் போது, நமது மாண்புமிகு மேலமை நீதிமன்றம் பின்வரும் வழக்கில்

**AIRONLINE 2021 SC 118**

**Ram Vijay Singh vs State of U.P.**

**https://indiankanoon.org/doc/19530662/**

*18. We do not find any merit in the arguments raised by the learned counsel for the appellant. A part statement of a witness can be be- lieved even though some part of the statement may not be relied upon by the court. The maxim Falsus in Uno, Falsus in Omnibus is not the rule applied by the courts in India. This Court recently in a judgment reported as Ilangovan v. State of T.N. held that Indian courts have always been reluctant to apply the principle as it is only a rule of caution. It was held as under:-*

*“11. The counsel for the appellant lastly argued that once the witnesses had been disbelieved with respect to the co- accused, their testimonies with respect to the present 8 (2020)10 SCC 533 accused must also be discarded. The counsel is, in effect, relying on the legal maxim “falsus in uno, falsus in omnibus”, which Indian courts have always been reluctant*

*to apply. A three-Judge Bench of this Court, as far back as in 1957, in Nisar Ali v. State of U.P. [Nisar Ali v. State of U.P., AIR 1957 SC 366 : 1957 Cri LJ 550] held on this point as follows: (AIR p. 368, paras 9-10) "9. It was next contended that the witnesses had falsely implicated Qudrat Ullah and because of that the court should have rejected the testimony of these witnesses as against the appellant also. The well-known maxim falsus in uno, falsus in omnibus was relied upon by the appellant.*

*The argument raised was that because the witnesses who had also deposed against Qudrat Ullah by saying that he had handed over the knife to the appellant had not been believed by the courts below as against him, the High Court should not have accepted the evidence of these witnesses to convict the appellant. This maxim has not received general acceptance in different jurisdictions in India nor has this maxim come to occupy the status of a rule of law. It is merely a rule of caution. All that it amounts to is that in such cases the testimony may be disregarded and not that it must be disregarded. One American author has stated:*

*'… the maxim is in itself worthless; first in point of validity … and secondly, in point of utility because it merely tells the jury what they may do in any event, not what they must do or must not do, and therefore, it is a superfluous form of words. It is also in practice pernicious….' [ Wigmore on Evidence, Vol. III, Para 1008]*

*10. The doctrine merely involves the question of weight of evidence which a court may apply in a given set of circumstances but it is not what may be called "a mandatory rule of evidence"." (emphasis supplied) This principle has been consistently followed by this Court, most recently in Rohtas v. State of Haryana [Rohtas v. State of Haryana, (2019) 10 SCC 554 : (2020) 1 SCC (Cri) 47] and needs no reiteration."*

**2017 (11) SCC 195**

***Yogesh Singh vs State of Tamil Nadu***

***https://indiankanoon.org/doc/113267195/***

*29. It is well settled in law that the minor discrepancies are not to be given undue emphasis and the evidence is to be considered from the point of view of trustworthiness. The test is whether the same inspires confidence in the mind of the Court. If the evidence is incredible and cannot be accepted by the test of prudence, then it may create a dent in the prosecution version. If an omission or discrepancy goes to the root of the matter and ushers in incongruities, the defence can take advantage of such inconsistencies. It needs no special emphasis to state that every omission cannot take place of a material omission and, therefore, minor contradictions, inconsistencies or insignificant embellishments do not affect the core of the prosecution case and should not be taken to be a ground to reject the prosecution evidence. The omission should create a serious doubt about the truthfulness or creditworthiness of a witness. It is only the serious contradictions and omissions which materially affect the case of the prosecution but not every contradiction or omission. (See Rammi @ Rameshwar Vs. State of M.P., (1999) 8 SCC 649; Leela Ram (dead) through Duli Chand Vs. State of Haryana and Another, (1999) 9 SCC 525; Bihari Nath Goswami Vs. Shiv Kumar Singh & Ors., (2004) 9 SCC 186; Vijay @ Chinee Vs. State of Madhya Pradesh, (2010) 8 SCC 191; Sampath Kumar Vs. Inspector of Police, Krishnagiri, (2012) 4 SCC 124; Shyamal Ghosh Vs. State of West Bengal, (2012) 7 SCC 646 and Mritunjoy Biswas Vs. Pranab @ Kuti Biswas and Anr., (2013) 12 SCC 796).*

***2013 (4) SCC 607***

***Subal Ghorai and others vs Sate of West Bengal***

***https://indiankanoon.org/doc/60133878/***

*18. In the cross-examination of PW-19 PI Ghosh - the investigating*

*officer, certain omissions in the evidence of prosecution witnesses have been brought on record. Surprisingly, his attention was not drawn to the evidence of PW-1 Promila at all. The evidence of PW-19 PI Ghosh has not been happily recorded. In any case, the omissions are minor omissions pertaining to non-mentioning of weapons carried by the accused or not referring to the parts of the bodies of the deceased on which the assault was made. Some of the witnesses have omitted to mention the names of some of the accused. But, in our opinion, on the substratum of the prosecution story, there are no omissions or contradictions. While analyzing the evidence, we have kept in mind the manner in which several accused persons armed with weapons attacked the deceased. In an attack of this type, in the nature of things, there are bound to be some omissions or discrepancies in the evidence of witnesses. Experience shows that witnesses do exaggerate and this Court has taken note of such exaggeration made by the witnesses and held that on account of embellishments, evidence of witnesses need not be discarded if it is corroborated on material aspects by the other evidence on record. Therefore, the fact that some witnesses have not referred to certain accused in their police statements but have attributed role to them in the court, does not lead us to conclude, in the peculiar facts of this case, that the said witnesses are not credible witnesses. In this connection, we may usefully refer to Leela Ram on which reliance is placed by learned counsel for the State. The following observations of this Court are material.*

*"12. It is indeed necessary to note that one hardly comes across a witness whose evidence does not contain some exaggeration or embellishment – sometimes there could even be a deliberate attempt to offer embellishment and sometimes in their overanxiety they may give a slightly exaggerated account. The court can sift the chaff from the grain and find out the truth from the testimony of the witnesses. Total repulsion of the evidence is unnecessary. The evidence is to be*

*considered from the point of view of trustworthiness. If this element is satisfied, it ought to inspire confidence in the mind of the court to accept the stated evidence though not however in the absence of the same.”*

என்று குறிப்பிட்டுள்ளது. அது போல இவ்வழக்கிலும் சம்பவ இடம் பொன்மனை சந்திப்பில் சாலையின் மேற்கு பக்கம் நடந்துள்ளது. ஆனால் சாட்சிகள் சம்பவம் சாலையின் கிழக்கு பக்கம் நடந்ததாக சாட்சியமளித்துள்ளனர். மேற்படி சங்கதி பொய் என்று எடுத்துக்கொண்டாலும் கூட காயம்பட்ட அ.சா.2ன் சாட்சியம் மிக முக்கியமானதாக உள்ளது. சம்பவ நாளன்று எதிரி தான் வெட்டுக்கத்தியால் தன்னை தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், சம்பவ இடத்தை மாற்றி சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர் என்பதும், காயம்பட்ட அ.சா.2க்கு ஏற்பட்ட காயங்களின் எண்ணிக்கையை மாற்றி சாட்சியம் அளித்துள்ளனர் என்பதற்காகவும் அவர்களது சாட்சியம் முழுமையும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதல்ல.

32. மேலும் சம்பவமானது பொன்மனை சந்திப்பில் வைத்து நடந்தது என்பது அ.சா.ஆ.1 புகார் மனு அ.சா.ஆ.5 பார்வை மகஜர், அ.சா.ஆ–6 மாதிரி வரைபடம் ஆகியவற்றிலிருந்து உறுதியாகத் தெரியவந்துள்ள நிலையில் சம்பவ இடத்தை பொன்மனை சந்திப்பில் சில அடி துூரம் மாற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது மட்டுமே அரசுத்தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமாக மாற்றாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் அ.சா.2ன் சாட்சியத்திலிருந்து எதிரி வெட்டுக்கத்தியால் அ.சா.2ன் தலையில் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கு சம்பவ இடத்தை மட்டுமே சார்ந்த வழக்கு அல்ல. சம்பவ இடத்தை சாட்சிகள் மாற்றி கூறிவிட்டார்கள் என்பது மட்டுமே இவ்வழக்கில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

33. அதேபோல் அ.சா.2க்கு தலையில் 2 சிதைந்த காயங்கள் மட்டுமே உள்ள நிலையில் எதிரி அ.சா.2ஐ 3 முறை தலையில் வெட்டியதாக சாட்சிகள் முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்துள்ளார்கள் மட்டுமே அரசுத்தரப்பு வழக்கு முழுவதையும் பாதிப்பதாக உள்ளதா என்பது குறித்து பார்க்கும் போது, ஏற்கனவே **Subal Ghorai** வழக்கில் நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் சாட்சிகளின் சாட்சியத்தில் சில சங்கதிகள் குறித்து மேம்படுத்தப்பட்ட வகையிலும் மிகைப்படுத்தியும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது இயல்பானது தான். மேலும் நீதிமன்றங்கள் சாட்சிகளின் சாட்சியத்தை முழுமையாக பரிசீலனை செய்து தேவையற்ற சங்கதிகளை நீக்கி வழக்கிற்கு தேவையானவற்றை தேர்ந்தெடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. இது குறித்து பார்க்கும் போது, சாட்சிகள் தங்கள் சாட்சியத்தின் போது, சம்பவத்தை சிறிது மேம்படுத்தி சாட்சியம் அளிப்பது பொதுவானது தான். எனவே சாட்சிகள் சம்பவத்தை மேம்படுத்தியும் மற்றும் மிகைப்படுத்தியும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது மட்டுமே அரசுத்தரப்பு வழக்கு முழுவதையும் பாதிக்காது. எனவே சம்பவ இட மாறுபாடும், காயங்களின் எண்ணிக்கையின் மாறுபாடும் இவ்வழக்கின் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

34. இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிகளான அ.சா.13 மற்றும் அ.சா.14 ஆகியோர் காயம்பட்ட சாட்சியின் ரத்தம்பட்ட ஆடைகளை கைப்பற்றி இரசாயண பரிசோதனைக்கு அனுப்பி வைக்கவில்லை. மேலும் முன்பிணை பெற்ற எதிரி பின்னர் காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரணையின் போது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்பதும் அதன் அடிப்படையில் சா.பொ.1 வெட்டுக்கத்தி கைப்பற்றப்பட்டது என்பதும் நம்ப இயலாததாக உள்ளது. இந்நிலையில் மேற்படி புலன் விசாரணை

குறைபாடுகள் அரசுத்தரப்பு வழக்கை பாதிப்பை ஏற்படுத்துமா என்பது குறித்து பார்க்கும் போது

**2010 (9) SCC 567**

**C. Muniappan & Ors vs State of Tamil Nadu**

***https://indiankanoon.org/doc/1438332/***

*44. There may be highly defective investigation in a case. However, it is to be examined as to whether there is any lapse by the I.O. and whether due to such lapse any benefit should be given to the accused. The law on this issue is well settled that the defect in the investigation by itself cannot be a ground for acquittal. If primacy is given to such designed or negligent investigations or to the omissions or lapses by perfunctory investigation, the faith and confidence of the people in the criminal justice administration would be eroded. Where there has been negligence on the part of the investigating agency or omissions, etc.*

*which resulted in defective investigation, there is a legal obligation on the part of the court to examine the prosecution evidence de hors such lapses, carefully, to find out whether the said evidence is reliable or not and to what extent it is reliable and as to whether such lapses affected the object of finding out the truth. Therefore, the investigation is not the solitary area for judicial scrutiny in a criminal trial. The conclusion of the trial in the case cannot be allowed to depend solely on the probity of investigation. (Vide Chandra Kanth Lakshmi v. State of Maharashtra, AIR 1974 SC 220; Karnel Singh v. State of Madhya Pradesh, (1995) 5 SCC 518; Ram Bihari Yadav v. State of Bihar, AIR 1998 SC 1850; Paras Yadav v. State of Bihar, AIR 1999 SC 644; State of Karnataka v. K. Yarappa Reddy, AIR 2000 SC 185; Amar Singh v. Balwinder Singh, AIR 2003 SC 1164; Allarakha K. Mansuri v. State of Gujarat, AIR 2002 SC 1051; and Ram Bali v. State of U.P., AIR 2004 SC 2329).*

***Santhoshkumar vs The State Rep.***

***https://indiankanoon.org/docfragment/78727420/***

*22. He further submitted that the perusal of the evidence of P.W.2, and connected documents namely the complaint and FIR clearly shows that P.W.2 gave only one statement and that was recorded by P.W.10. May be because of lack of understanding the question, P.W.1 appears to have given confusing answers. There is no second complaint or previous complaint as alleged by the accused. The* ***non recovery*** *of* ***blood stained cloths*** *from P.W.1 to P.W3 is the omission on the part of the investigation officer. However, in the facts and circumstances of the case where the evidence of P.W.1 is available with regard to the occurrence and participation of the accused in the crime, the* ***non recovery*** *of* ***blood stained cloths*** *of P.W.1, P.W.2 and P.W.3 and subjecting them for forensic analysis will no way affect the case of the prosecution. With regard to insertion and interpolation in Mahazar and Form 91, though there are some insertions and interpolations, nothing had been altered differently or with new information. Descriptions of material objects had only been elaborated, which will no way affect the case of the prosecution.*

35. அ.சா.2 தனது சாட்சியத்தில், எதிரி தன்னை அசிங்கமான வார்த்தைகளில் பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எதிரி அசிங்கமாக பேசியதால் தனக்கு அசிங்கமும் அருவருப்பும் ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி அசிங்கமான வார்த்தைகளை உபயோகித்தார் என்பது மட்டுமே பிரிவு 294(பி), இ.த.ச படியான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதல்ல. எனவே பிரிவு 294(பி) இ.த.ச படியான குற்றச்சாட்டு சந்தேகத்தின்படி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

36. எதிரி அ.சா.2 ஐ வெட்டுக்கத்தியால் தாக்கியதில் அ.சா.2க்கு ஏற்பட்ட 2வது காயம் கொடுங்காயம் என்பது அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4

காயச்சான்றுகளிலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. மேலும் காயங்களில் எலும்பு முறிவும், மூளையின் சிறிய பகுதி வெளியே காணப்பட்டுள்ளது. இதிலிருந்து எதிரி அ.சா.2ன் உடலின் மிக முக்கியமான பாகமான தலையில் கொடிய ஆயுதமான வெட்டுக்கத்தியால் தாக்கி கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. எதிரி அ.சா.2ஐ கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் தான் கொடிய ஆயுதமான வெட்டுக்கத்தியால் உடலின் முக்கியமான பாகமான தலையில் 2 முறை வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. காயம்பட்ட அ.சா.2க்கு ஒரு காயம் சாதாரண காயம் மற்றொரு காயம் கொடுங்காயமாகும். எனவே பிரிவு 324, 326 மற்றும் 307 இ.த.ச படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் பிரிவு 324, 326 இ.த.ச ஆகியவை பிரிவு 307 இ.த.ச வில் அடங்கி வருவதால் இவ்வழக்கில் பிரிவு 324, 326 ஆகியவற்றுக்கு பதிலாக பிரிவு 307ன் படி தண்டனை வழங்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

37. மேற்படி எதிரிக்கு வழங்கப்போகும் தண்டனை குறித்து கு.வி.மு.ச.பிரிவு 235 (2)–ன் கீழ் வினவிய போது

**" குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கூறினார் "**

எதிரியின் வேண்டுகோள் பரிசீலித்து பார்க்கப்பட்டது. அ.சா.1க்கு ஏற்பட்ட காயங்களில் 2வது காயம் கொடுங்காயமாகும். தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டு மூளை சிறிது வெளியே தெரிந்துள்ளது. மேற்படி காயத்தினால் இறப்பு கூட ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. மேலும் பிரிவு 307 இ.த.ச படியான குற்றம் தனிமனிதனுக்கு எதிரான குற்றமட்டுமல்ல அது சமுதாயத்திற்கு எதிரான குற்றமாகும். எனவே எதிரிக்கு குறைந்தபட்ச

தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக**

1) எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(பி), ன் படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன்கீழ் விடுதலை செய்தும்,

2) எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவு 307 ன் படி குற்றவாளி என தீர்மானித்து 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் ரூ.5000/– அபராதம் விதித்தும், அபராதத் தொகையை செலுத்த தவறினால் மேலும் 3 மாதம் கடுங்காவல் சிறைத்தண்டனையும் விதித்து கு,வி.மு.ச.பிரிவு 235(2)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

3) இவ்வழக்கில் ஆர்.பி. எண் 16/2021–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.2 TN 74 W 1087 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் நீதிமன்றத்தில் இருந்து இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி சான்று பொருளை மேல்முறையீட்டின் தீர்ப்பிற்கு உட்பட்டு உரிமையாளரே வைத்துக்கொள்ளலாம் என்றும் பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட் வெட்டுக்கத்தி ஒன்று உபயோகமற்றது என்பதால் அவற்றை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.03.11 16:48:13 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி

பத்மனாபபுரம்

**இணைப்பு:-**

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | - | திருமதி. மஞ்சு |
| 2) | அ.சா.2 | - | திரு. செந்தில் |
| 3) | அ.சா.3 | - | திரு. ராஜேந்திர பிரசாத் |
| 4) | அ.சா.4 | - | திரு.செல்வன் |
| 5) | அ.சா.5 | - | திரு. மணியன் |
| 6) | அ.சா.6 | - | திரு. ராமையன் |
| 7) | அ.சா.7 | - | திரு. ராம்குமார்( மருத்துவர்) |
| 8) | அ.சா.8 | - | திரு. ஷஜின் |
| 9) | அ.சா.9 | - | திரு.பிரைட்சிங்பிரான்சிஸ்( மருத்துவர்) |
| 10) | அ.சா.10 | - | திரு.மணி |
| 11) | அ.சா.11 | - | திரு. பாக்கியராஜ் |
| 12) | அ.சா.12 | - | திரு. குமரேசன் |
| 13) | அ.சா.13 | - | திரு. பாஸ்கரன்(ஆய்வாளர்) |
| 14) | அ.சா.14 | - | திருமதி. உமா ( காவல் ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் ;**

| | | | |
|---|---|---|---|
| 1, | அ.சா.ஆ.1 | - | புகார் மனு |
| 2, | அ.சா.ஆ.2 | - | அத்தாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 3, | அ.சா.ஆ.3 | – | காயச்சான்று ( மருத்துவர் திரு. ராம்குமார் அவர்களால் வழங்கப்பட்டது) |
| 4, | அ.சா.ஆ.4 | – | காயச்சான்று ( மருத்துவர் திரு. பிரைட்சிங் பிரான்சிஸ் அவர்களால் வழங்கப்பட்டது) |
| 5. | அ.சா.ஆ.5 | – | முதல் தகவல் அறிக்கை |
| 6. | அ.சா.ஆ.6 | – | பார்வை மகஜர் |
| 7. | அ.சா.ஆ.7 | – | மாதிரி வரைபடம் |
| 8. | அ.சா.ஆ.8 | – | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 9. | அ.சா.ஆ.9 | – | அத்தாட்சி |
| 10. | அ.சா.ஆ.10 | – | படிவம் 95 |
| 11. | அ.சா.ஆ.11 | – | சட்ட பிரிவை மாற்றம் செய்த அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்கள்**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | வெட்டுக்கத்தி |
| சா.பொ.2 | – | TN 74 W 1087 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனம் |

**எதிரி தரப்பு சாட்சி**

– இல்லை –

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்;**

– இல்லை –

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.03.11 16:48:22 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி

பத்மனாபபுரம்